இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
2வது தளம், பெட்ரோ பவன், எண்.82, டி.டி.கே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018.
தொலைபேசி: 044 - 2498 8506 / 07 / 08

# வீட்டு உபயோகமல்லாத பிற LPG டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் -க்கு மட்டுமான LPG விநியோகஸ்தர்கள் நியமனத்திற்கான அறிவிப்பு

ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிட்டெட் (HPCL), உருளைகளில் அடைக்கப்பட்ட வீட்டு உபயோகமல்லாத பிற LPG எரிவாயுவை தமிழ்நாடு மாநிலத்தில் பட்டியலில் உள்ள அமைவிடங்களில் வர்த்தக மற்றும் தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்காக வீட்டு உபயோகமல்லாத பிற LPG உருளைக்கான பிரத்யேக விநியோகஸ்தர்களை நியமனம் செய்ய உத்தேசித்துள்ளது. எனவே, அதற்காக விருப்பம் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது. மேற்குறிப்பிட்ட வீட்டு உபயோகமல்லாத பிற LPG டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் -க்கான உத்தேச அமைவிடங்களின் பட்டியல், தகுதிக்கான விவரங்கள், தேர்ந்தெடுக்க மதிப்பீட்டு வரம்பு, விண்ணப்ப படிவம், பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை HPCL-ன் **www.hindustanpetroleum.com** இணையதளத்தில் உள்ளன. அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உத்தேசிக்கப்பட்ட வீட்டு உபயோகமல்லாத பிற LPG டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் என்பது ஒரு வர்த்தக செயல்பாடு மட்டுமே . இது ஏதேனும் வேலைக்கான விண்ணப்பம் இல்லை என்பதையும் உறுதியான பலன்களையும் இலாபங்களையும் உத்தரவாதம் ஆக தர முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். உத்தேசிக்கப்பட்ட வீட்டு உபயோகமல்லாத பிற LPG டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் என்பது வீட்டு உபயோகமல்லாத பிற LPG உருளைகளை மார்க்கெட்டிங் செய்வதற்காக மட்டுமே.

இப்படிப்பட்ட வீட்டு உபயோகமல்லாத பிற LPG உருளை விநியோகஸ்தர்கள் /டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் எடுத்தவர்கள், வீட்டு உபயோக LPG உருளைகளை மார்க்கெட் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் வீட்டு உபயோக வாடிக்கையாளர்களை பதிவு செய்து கொள்ளக் கூடாது. பட்டியலில் உரிய அமைவிடத்திற்கு எதிராக கொடுக்கப்பட்ட தொடர்பு முகவரியில் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பம் இடப்பட்ட விண்ணப்ப படிவங்கள், நேரடியாக அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை உறையில் இட்டு மூடி முத்திரையிட வேண்டும். உறையின் மீது விண்ணப்பதாரர் பெயர், விண்ணப்பிக்கும் அமைவிடம், முகவரி, மொபைல் எண் ஆகிய விவரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். மேலும், விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ₹ **1,000/-** (ரூபாய் ஆயிரம் மட்டும்) தொகையை (திருப்பி தரப்பட மாட்டாது) விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். (ஆ.தி/ப.கு. பிரிவை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு - ₹ **500/-** ரூபாய் ஐநூறு மட்டும்) மேற்குறிப்பிட்ட கட்டணத்தொகையை சம்பந்தப்பட்ட தொடர்பு முகவரி /அமைவிடத்தில் காசாக கூடிய Hindustan Petroleum Corporation Limited என்ற பெயரில் ஏதேனும் அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட டிமாண்ட் டிராப்ட் / பே ஆர்டர் வடிவில் சமர்ப்பிக்க வேண்டும். மெரிட் பேனலில் சேர்க்கப்படுவதற்கான நேர்காணலுக்கு பிறகு விண்ணப்பதாரர், குறைந்த பட்சமாக 40% மொத்த மதிப்பெண்களை. எடுத்திருக்க வேண்டும். ஏதேனும் ஓர் அமைவிடத்திற்கு எந்த ஒரு விண்ணப்பதாரரும் 40% மதிப்பெண்கள் பெறாவிட்டால் அப்படிப்பட்ட அமைவிடம் பரிசீலிக்கப்பட மாட்டாது; அதற்கு மீண்டும் விளம்பரப்படுத்தப்படும். செயலாக்க கட்டணத்துடன் கூடிய மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்ப படிவம், உரிய அமைவிடத்தின் தொடர்பு முகவரியில் நவம்பர் 25, 2016 ம் தேதியன்று 16.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரம் நீட்டிப்பு, திருத்தம், சேர்க்கை ஏதேனும் இருந்தால் அவை மேற்கண்ட இணையதளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்கள், அவ்வப்போது இணையதளத்தை பார்த்து தகவல் அறிந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதுநிலை வட்டார மேலாளர் -
சென்னை LPG வட்டார அலுவலகம்

SAVE FUEL

சமையல் எரிவாயு உருளையை பயன்படுத்தாத நேரங்களில் அணைத்து வைக்கவும்